දුරකථන
தொலைபேசி
Telephones
} 011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
} 011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
} 011-2876169
011-2876181

විද්‍යුත් තැපැල
மின்-அஞ்சல்
E - mail
} info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
} www.psc.gov.lk

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
பகிரங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
**OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION**

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල.
இல. 1200/9, இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.
No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla.

මගේ අංකය
எனது இல.
My No.

PSC/EST/05-03/08/2018

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date

2025.02.18

பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் : 05/2023 (i)

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,

அனைத்து திணைக்களத் தலைவர்கள்,

**<u>பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும் அதிகாரங்கள் தொடர்பில் நிருவாகப் பணிகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளைப் பெயரிடுதல்</u>**

2310/29 ஆம் இலக்க மற்றும் 2022.12.14 ஆம் திகதிய அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் XXII ஆம் அத்தியாயத்தின் 294 ஆம் இலக்க விதியின் XIV ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் அட்டவணையின் (அ) நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள் மற்றும் உத்தியோகத்தர் வகுதிகள் தொடர்பில் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படும் அதிகாரங்களுக்கு அமைவாக நிருவாகப் பணிகளுக்குப்* பொறுப்பாக செயற்படுவதற்கு அதன் (ஆ) நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பெயரிடப்பட்டுள்ளனர் என்பதை இத்தால் அறியத் தருகிறேன்.

| | **சேவைகள்/உத்தியோகத்தர் வகுதிகள் (அ)** | **நிருவாகப் பணிகள் கையளிக்கப்படும் அதிகாரிகள் (ஆ)** |
|---|---|---|
| I | (அ) இலங்கை கணக்காளர் சேவை<br>(ஆ) இலங்கை நிர்வாக சேவை<br>(இ) இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை<br>(ஈ) இலங்கை பொறியியலாளர் சேவை<br>(உ) இலங்கை திட்டமிடல் சேவை<br>(ஊ) இலங்கை விஞ்ஞானவியல் சேவை | பொது நிர்வாகம் எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் |
| II | இலங்கை விவசாய சேவை | விவசாயம் எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் |
| III | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | கால்நடை அபிவிருத்தி எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் |
| IV | இலங்கை நில அளவையாளர் சேவை | நில அளவை எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| V | நாடளாவிய சேவைகளில் உள்ளடங்காத, பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/ 2006 இன் இணைப்பு (II) இல் பொருள்கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட அதியுயர் தரத்தைச் சேர்ந்த /விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | பதவி உள்ளடங்கும் அமைச்சு அல்லது பதவி உள்ளடங்கும் திணைக்களத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் |
| VI | நாடளாவிய சேவைகளில் உள்ளடங்காத மற்றும் அமைச்சொன்றின் கீழ் வராத பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இன் இணைப்பு (II) இல் பொருள்கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட அதியுயர் தரத்தைச் சேர்ந்த /விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்<br><br>உ-ம் : இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு | ஏற்புடைய நிறுவனத் தலைவர்கள் |
| VII | இணைந்த சேவையின் அதியுயர் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | பொது நிர்வாகம் எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் |

* மேற்குறித்த பந்தியில் "நிருவாகப் பணிகள்" என்பது, பகிரங்க சேவை ஆணைக்குழுவிடம் காணப்படும் அதிகாரங்களுக்குரிய நிருவாகப் பணிகளாவதுடன், அமைச்சு செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்குரிய பணிகள் அதில் உள்ளடங்காது.

02. எவ்வாறாயினும், பின்வரும் 03 ஆம் பந்தியில் (i) – (viii) வரை குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் தவிர ஏனைய அனைத்துப் பணிகளுக்குமான அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை மேற்குறித்த (அ) நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள்/உத்தியோகத்தர் வகுதிகள் தொடர்பில் (ஆ) நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிருவாகப் பணிக்குப் பொறுப்பான ஏற்புடைய செயலாளர் அல்லது நிறுவனத் தலைவரே தனிப்பட்ட முறையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. மேற்குறித்த (ஆ) நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சுச் செயலாளர் ஒருவரின் நிர்வாக அதிகாரத்தின் கீழ் வரக்கூடிய (அ) நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு சேவை/உத்தியோகத்தர் வகுதிக்கு ஏற்புடைய பின்வரும் விடயங்கள் தொடர்பில் தீர்மானமெடுப்பதற்குப் பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்குத் தேவைப்படும் பரிந்துரையை, அவதானிப்பை அல்லது வேறு ஒரு தகவலைத் தமக்குப் பதிலாக அந்த ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதன் பொருட்டு குறித்த அனைத்து செயலாளர்களும் தமது அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவரைப் பெயரிட முடியும் என்பதுடன், அதன் பொருட்டு பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

i. ஏற்புடைய சேவைப் பிரமாணக்குறிப்பின்/ ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நியமனத்தை உறுதிப்படுத்தல்

ii. ஏற்புடைய சேவைப் பிரமாணக்குறிப்பு/ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைய SL – I சம்பள வகுதிகளின் பதவிகளில் தரம் II மற்றும் I பதவியுயர்வுகள்

iii. அரசாங்க சேவையிலிருந்து பிறிதொரு பதவிக்கு அல்லது அரசாங்க சேவைக்கு வெளியிலுள்ள பதவியொன்றிற்கு விடுவித்தல் அல்லது மாகாண அரச சேவையின் பதவியொன்றிற்கு விடுவித்தல்

iv. பதிற்கடமை/கடமைகளை மேற்கொள்வதற்காக நியமித்தல்

v. வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்கான சலுகைகளை வழங்கல்

vi. பொது நிர்வாக சுற்றறிக்கை 30/88 இன் கீழ் ஓய்வு பெறுவித்தல்

vii. அதிகாரம் கையளிக்கப்பட்ட அதிகாரியொருவரினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பில் பரிந்துரைகளை வழங்கல்

viii. இராஜினாமா செய்தல்

04. மேலும், மேலதிக செயலாளர் பதவியில் உத்தியோகத்தர் ஒருவரின் சேவை முடிவுற்று வேறு ஒரு உத்தியோகத்தர் குறித்த பதவிக்கு நியமிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் புதிய மேலதிக செயலாளருக்கு மேற்குறித்தவாறு நிருவாகப் பணிகளைக் கையளிப்பதற்குக் குறிப்பிடத்தக்கதொரு காலம் செலவிடப்படும் சந்தர்ப்பங்களை பகிரங்க சேவை ஆணைக்குழு அவதானித்துள்ளது.

05. இதன் காரணமாக, அரச சேவையில் மனித வள முகாமைத்துவப் பணிகளில் ஏற்படும் தேவையற்ற தாமதங்களைத் தவிர்ப்பதற்கு, எதிர்காலத்தில் தங்களது அமைச்சுக்குப் புதிய மேலதிக செயலாளர் ஒருவரை நியமிப்பதற்காகப் பகிரங்க சேவை ஆணைக்குழுவிடம் பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், குறித்த மேலதிக செயலாளருக்குப் பகிரங்க சேவை ஆணைக்குழுவினாலேயே மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு அமைவாக நிருவாகப் பணிகளைக் கையளிப்பதற்குத் தாங்கள் கருதினால், அதற்கான பரிந்துரையையும் அதனுடன் சமர்ப்பிக்குமாறு தயவுடன் அறியத் தருகிறேன்.

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன
செயலாளர்
பகிரங்க சேவை ஆணைக்குழு